# உண்மைநிலை அறிதல்




பாடம் 1 ஏப்ரல் 4, 2026




“பிதா என்னில்
அன்பாயிருக்கிறது
போல நானும்
உங்களில்
அன்பாயிருக்கிறேன்;
என்னுடைய
அன்பிலே
நிலைத்திருங்கள்..”
(யோவான் 15:9)

நம்மில் ஒவ்வொருவருக்கும் தேவனுடன் ஒரு வித்தியாசமான உறவு அமைந்திருக்கிறது. ஆனால், ஒரு விஷயத்தில் நாம் அனைவரும் உடன்படுகிறோம்: இந்த உறவு வளர முடியும் (வளரவும் வேண்டும்).



நாம் வளர்ச்சி அடைவதற்கு எடுக்க வேண்டிய முதல் படி, நமது தற்போதைய நிலையை உணர்ந்து கொள்வதே ஆகும்.

வாழ்வின் இந்த இறுதிக் கட்டத்தில் திருச்சபையின் ஆன்மீக நிலை குறித்து தேவன் நமக்கு ஒரு பொதுவான செய்தியை தந்துள்ளார். இப்போது, அந்த செய்தியின் எந்த பகுதி நமக்கு பொருந்துகிறது என்பதையும், தேவனுடனான நமது உறவை எவ்வாறு பலப்படுத்தி ஆழ்ப்படுத்துவது என்பதையும் அறிந்துகொள்ள, நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்பது நமது பொறுப்பாகும்.



- தேவனுடைய செய்தி (வெளிப்படுத்தல் 3:14-22):
  - மதிப்பீடு (வ. 14-17)
  - தீர்வு (வ. 18)
  - விளைவு (வ. 19-20)
  - திருப்தி (வ. 21-22)
- உண்மைநிலை அறிதல் (யோவான் 15:1-11):
  - கொடியும் செடியும்
  - சாறு

# தேவனுடைய செய்தி

(வெளிப்படுத்தல் 3:14-22)

# மதிப்பாய்வு

"நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதைஅறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும், சொல்லுகிறபடியால்;" (வெளிப்படுத்தல் 3:17)




ஏழு சபைகளுக்கு அளிக்கப்பட்ட செய்தியானது, அப்போஸ்தலர்களின் க முதல் இன்று வரை உலக திருச்சபையின் நிலையை எடுத்துரைக்கிறது (வெளி. 2-3). நம்முடைய நாளுக்கான செய்தியை (லவோதிக்கேயா) அளிக்கும்போது, இயேசு தம்மை "ஆமேன் [சத்தியம்], உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சி" (வெளி. 3:14) என்கிறார்.






நாம் நம்மை பார்க்கும்போது நம்முடைய உண்மையை பார்க்கிறோம்: "நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும்," (வெளி. 3:17மு) என்று சொல்கிறோம்.

ஆனால் இயேசுவோ உண்மையை, நமது யதார்த்தத்தை காண்கிறார்: "நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணி" (வெளி. 3:17பி) என்று கூறுகிறார்.



இப்போது நம்மை நாமே மதிப்பீடு செய்ய வேண்டிய நேரம். உண்மையாகவே என்னிடம் என்ன இருக்கிறது, எனக்கு இன்னும் என்ன தேவை என்பதை நான் உணர்ந்திருக்கிறேனா? இயேசுவுடனான எனது உறவில் நான் எவ்வளவு வளர்ந்திருக்கிறேன்? நான் நல்லவிதமாக மாறிக் கொண்டிருக்கிறேனா?



# தீர்வு

"நான்: நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம்போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்." (வெளிப்படுத்தல் 3:18)

நமது சூழ்நிலையில் திருப்தியாக இருப்பது அக்கறையின்மையை (வெதுவெதுப்பை) உண்டாக்குவதால், மூன்று காரியங்களை செய்யுமாறு இயேசு நமக்கு அறிவுறுத்துகிறார்:

## புடமிடப்பட்ட பொன்னை வாங்க வேண்டும்



அரைகுறை உண்மைகளுடனோ அல்லது வேதாகமத்தின் மேலோட்டமான ஆய்வுகளுடனோ நாம் திருப்தி அடைந்துவிடக்கூடாது. மனிதர்களின் போதனைகளை (பளப்பளப்பான அலங்காரங்களை) நாம் நிராகரித்து, வேதாகமத்தை பற்றிய நமது புரிதலில் உள்ள எல்லா குறைபாடுகளையும் (கசடுகளையும்) நீக்குவதற்காக, அதனைக் குறித்த நமது ஆய்வில் நாம் ஆழமாக மூழ்க வேண்டும்.

## வெண்வஸ்திரங்களை வாங்க வேண்டும்



நமது சொந்த நீதியான செயல்களால் நம்மை தேவனுக்கு முன்பாக காட்ட முயற்சிப்பது, அவருக்கு முன்பாக நம்மை நிர்வாணமாக காட்டுவதற்கு சமம். இரட்சிப்பை அடைவதற்கான ஒரே வழியாக இயேசுவின் நீதியை ஏற்றுக்கொள்ள வேண்டும்


## கண்களுக்குக் கலிக்கம் போட வேண்டும்



பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். அவரால் மட்டுமே நமக்கு ஆவிக்குரிய பகுத்தறிவை தந்து, நமது உண்மையான நிலையை நமக்கு உணர்த்த முடியும் (யோவான் 16:8).

# வி ளை வு

"இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்." (வெளிப்படுத்தல் 3:20)



ஒரு பிரச்சனை இருக்கிறது. ஆன்மீக ரீதியாக நான் நன்றாக நன்றாகவே உணர்கிறேன், ஆனால் நான் மேம்பட வேண்டும் என இயேசு விரும்புகிறார். இருப்பினும், எனக்கு மாற்றம் தேவை என்பதை உணராவிட்டால், நான் ஒருபோதும் மாற மாட்டேன். என்னிடம் ஏற்கனவே இருப்பதாக நான் நினைக்கும் ஒன்றை மீண்டும் வாங்க நான் ஒருபோதும் விரும்பமாட்டேன். இதை தீர்க்க, இயேசுவிடம், அவருக்கே உரிய வழிமுறைகள் உள்ளன: "நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்;", மேலும் அவர்: "மனந்திரும்பு" என்கிறார் (வெளி. 3:19). இயேசுவின் கண்டனமும் தண்டனையும் எதிர்மறையானவை அல்ல. அவர் உரையாடல் பாதையையே விரும்புகிறார். அவர் நம்முடன் அமைதியாக அமர்ந்து பேச விரும்புகிறார்... "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்." (வெளி. 3:20).

இயேசு என் இதய கதவை தட்டி பொறுமையுடன் காத்திருக்கிறார். அவருடன் ஒரு உறவை ஏற்படுத்திக்கொள்ளும்படி என்னை கட்டாயப்படுத்துவதற்காக அவர் என் வாழ்வில் குறுக்கிடுவதில்லை. அதை திறக்கும் முடிவு என்னுடையது

# திருப்தி


"நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்."
(வெளிப்படுத்தல் 3:21)

இந்த பாதை எளிதானதல்ல என்பதை இயேசு அறிவார். பொன்னை வாங்குவதற்கும், வெண்வஸ்திரம் வாங்குவதற்கும், கண்களை காப்பதற்கும் நாம் செய்யும் முயற்சிகளை அவர் அறிவார். வெதுவெதுப்படைவதற்கும் கதவைக் திறப்பதற்கும் அவருடன் இணைவதற்கும் நாம் படும் போராட்டங்களையும் அவர் அறிவார். அதனால் தான் அவர் நம்மிடம்: நான் ஜெயம் கொண்டது போல நீங்களும் ஜெயம் கொள்ள முடியும் (வெளி. 3:21). நாம் ஒருபோதும் முதல் அடியை எடுத்து வைக்க மாட்டோம் என்பதும் அவருக்கு தெரியும், தேவன் தாம் எப்போதுமே முன்முயற்சி எடுத்திருக்கிறார்.





அவர் நம்மை படைக்க தீர்மானித்தார் (ஆதி. 2:7)



நாம் பாவம் செய்திருக்கும் போது அவர் நம்மை தேடி வருகிறார் (ஆதி. 3:8-9)



நம்மை காப்பாற்ற தம்மையே அவர் தியாகம் செய்தார் (யோவான் 3:16)



அவர் நமக்கு ஒரு வெகுமதியை அளிக்க விரும்புகிறார்: அவருடன் அமர்ந்து, அவருடைய துணையுடன் நித்தியத்தை அனுபவிப்பதே அது (வெளி. 3:21)


இந்த தெய்வீக நடத்தைக்கான திறவுகோல் தான் (நாம் தகுதியானவர்கள் அல்ல) அன்பு: "அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்;" (எரேமியா 31:3). அவர் நம்முடன் ஒரு உறவை வைத்துக் கொள்ள விரும்புகிறார். நாம் அவருடன் ஒரு உறவை ஏற்படுத்திக் கொள்ள விரும்புகிறோமா? அவர் நம்மை நேசிப்பது போல, நாமும் நம் இதயத்தை அவருக்கு திறந்து அவரை நேசிப்போமா?

# உண்மைநிலை அறிதல்

(யோவான் 15:1-11)

# செடியும் கொடியும்

"நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது." (யோவான் 15:5)



தமது மரணத்திற்கு சற்று முன்பு, இயேசு தம்மை "திராட்சை செடி," என்றும் தம் சீடர்கள் "கிளைகள்" என்றும் அறிவித்தார். இதன் மூலம் அவர் என்ன கூற விரும்பினார்?

ஒரு கொடியானது செடியுடன் இணைக்கப்படாமல் சிறிது காலம் வாழ முடியும், ஆனால் அது இறுதியில் வாடிவிடும். நாம் நித்திய ஜீவனை இழந்துவிடாதபடிக்கு, இயேசு நம்மிடம் ஒரு மன்றாட்டு வைக்கிறார்: "என்னில் நிலைத்திருங்கள்" (யோவான் 15:4). திராட்சைசெடி மற்றும் அதன் கொடிகளை குறித்த இந்த உவமையை இயேசு சொல்லும் 11 வசனங்களில், 10 முறை "நிலைத்திருங்கள்" என்ற வினைசொல்லை பயன்படுத்துகிறார். அது நிச்சயமாக மிகவும் முக்கியமான ஒன்றாக இருக்க வேண்டும்.



லவோதிக்கேயாவின் மந்தமான மனப்பான்மைக்கு இயேசுவில் நிலைத்திருப்பது ஒரு மாற்று மருந்தாகும். மேலும், அது மகிழ்ச்சியின் ஊற்றாகும் (யோவான் 5:11). ஆனால் நாம் எப்படி இயேசுவில் நிலைத்திருக்கமுடியும்?

அவருக்கு பிரியமானதை செய்வதன் மூலம், அதவாது, அவருடைய கட்டளைகளை கைகொள்வதன் மூலம் (யோவான் 15:10). இது, தேவன் நமக்கு காட்டிய அன்புக்கு நாம் கொடுக்கும் அன்பான பதிலாகும் (1 யோவான் 4:19).



# சாறு

"என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்." (யோவான் 15:4)





குளிர் காலத்தில், கொடிகள் செடியுடன் இணைந்திருக்கும், ஆனால் அவை பழங்களை தருவதில்லை. ஏன்? ஏனென்றால் அவற்றுக்கு சாறு கிடைப்பதில்லை. வசந்த காலம் வரும்போது மட்டுமே இவை திராட்சை செடியிலிருந்து சாற்றை பெறுகின்றன. அதன் பிறகு தளிர்கள் (தண்டுகள்) வருகின்றன. யோவான் பயன்படுத்திய கிரேக்க சொல்லானது, முறித்து எடுக்கப்பட்டு மீண்டும் திராட்சை செடியில் ஒட்டுக்கட்டப்பட்ட கொடிகளையும் குறிக்கலாம்.

நாம் இளந்தளிர்களாக இருந்தாலும் சரி, முறிந்த கிளைகளாக இருந்தாலும் சரி, ஒரு விஷயம் தெளிவாகிறது: நமக்கு செடியின் சாறு தேவை. இந்த சாற்றை நாம் எதனுடன் ஒப்பிடலாம்?

அதே பிரசங்கத்தில் (யோவான் 14-17), இயேசு நமக்கு இவ்வாறு விளக்குகிறார்: நாம் விரும்பினால், நமக்கு ஜீவனை கொடுப்பதற்காக பரிசுத்த ஆவியானவரே நமக்குள்ளே கிரியை செய்கிறார்.

- அவர் நமது தேற்றரவாளன் (யோவான் 14:16-17)
- அவர் நமக்கு இயேசுவை வெளிப்படுத்துவார் (யோவான் 15:26)
- பாவத்தைக் குறித்து உணர்த்துவார் (யோவான் 16:8)
- சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துவார் (யோவான் 16:13)

